செ.கு.எண்: 45 நாள்: 30/01/2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை – 30.1.2012

காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணி புரிந்து வந்த திரு. N. இராஜகோபால் அவர்கள் தனது இரு சக்கர வாகனத்தில் பணிக்கு சென்றுகொண்டிருக்கும் போது ஸ்ரீபெரும்புதூர் திருவள்ளூர் நெடுஞ்சாலையில், மன்னூர் கூட்டுச் சாலை அருகே சாலை விபத்து ஏற்பட்டு படுகாயமடைந்து, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 28.1.2012 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிக்க துயரம் அடைந்தேன்.

காவல் துறை சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. இராஜகோபால் பணியில் இருக்கும் போது காலமானார் என்னும் செய்தி எனக்கு மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது. பணியில் இருக்கும் போது காலமான சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. இராஜகோபால் அவர்களின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவரது மனைவிக்கும், குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சாலை விபத்தில் காலமான சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. இராஜகோபால் அவர்களின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து இரண்டு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு, இயக்குநர்,**
**செய்தி, மக்கள் தொடர்புத் துறை,**
**சென்னை-9**

1/1